## விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தல்

### நாடளாவிய ரீதியில் வெற்றிடமாகக் காணப்படும்இலங்கை நிர்வாக சேவையின் ஆந் தரத்துடைய பிரதேச செயலாளர் பதவிகளுகுIஅரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஏற்பாடுகளுக்கமைய உத்தியோகத்தர்களை தெரிவு செய்தல்

வெற்றிடமாகவுள்ள பிரதேச செயலாளர் பதவிகளுக்கு தகைமைகளை பூர்த்தி செய்துள்ள இலங்கை நிர்வாக சேவையின் I ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோர பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.

2023.05.03 ஆந் திகதிக்கு 22 வெற்றிட எண்ணிக்கைகள் காணப்படுவதோடு அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (வெற்றிடங்கள் தொடர்பான ஆவணம் இணைப்பு 02 ஆக இணைக்கப்பட்டுள்ளது.)

வெற்றிடம் நிலவுகின்ற பிரதேச செயலாளர் பதவிகளுக்கு தகுதியுடைய I ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்கள் காணப்படாத சந்தர்ப்பங்களில், இலங்கை நிர்வாக சேவையில் திருப்திகரமான மற்றும் முனைப்புடனான 06 வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு சேவையாற்றியுள்ள ( 2015.01.01 ஆந் திகதிக்கு முன்னர் இலங்கை நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள) II ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களை அவ்வெற்றிடப் பதவிகளுக்கு முழு நேர அடிப்படையில் கடமையாற்றும் வகையில் நியமனம் செய்ய கருத்திற் கொள்ளப்படுவார்கள்.

முழு நேர அடிப்படையில் கடமைகளைச் செய்ய நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள், அப்பதவியில் ஒரு வருட காலத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு நியமிக்கப்படுவார்கள் என்தோடு, அந்த காலத்தை நீடிப்பது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிக் கோவையின் 121 ஆம் பிரிவின் படி செய்யப்படும்.

வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகள் இணைப்பு 01 இன் படி தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை உரிய வகையில் நிரப்பி செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, நில மெதுர, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05 என்ற முகவரிக்கு தமது திணைக்களத் தலைவரின் ஊடாக 2023.05.20 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியை உரிய திகதிக்கு முன்னர் diviaddivision@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள், முழுமை பெறாத விண்ணப்பங்கள் மற்றும் உரிய படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

**2.0 விண்ணப்பதாரியின் தகைமைகள்**

விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களின் சேவை மூப்புநிலைக்கு மேலதிகமாக, பின்வரும் தகைமைகளையும் முழுமைப்படுத்தியிருத்தல் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட எதிர்பார்க்கப்படுகிறது.

**.2.1சேவை அனுபவம்**

I. பிரதேச நிர்வாகம் மற்றும் அதன் தொழிற்பாடுகள் தொடர்பாக நன்கு அறிந்திருத்தல்

II. பிரதேச நிர்வாகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகள் அல்லது அது தொடர்பான கல்வித் தகைமைகள் இருத்தல், கற்றிருத்தல்

**.2.2தொழிற் தகைமைகள் / பயிற்சிகள் / மொழித் தேர்ச்சி**

I. பிரதேச நிர்வாகம் தொடர்பான பட்டப்பின் பட்டம்

II. பிரதேச நிர்வாகம் மற்றும் தொடர்பான பயிற்சி பாடநெறி

III. மொழித் தேர்ச்சி

**.2.3ஆற்றல்கள்**

I. பகுப்பாய்வுத் திறன்

II. சவால்களுக்கு எதிர்கொள்வதற்கான ஆர்வம்

III. பிரதேச நிர்வாகம் தொடர்பான அறிவு மற்றும் புரிதல்

**.2.4நடத்தைத் திறன்**

I. தலைமைத்துவம் (Leadership) மற்றும் ஆளுமை

II. தொடர்பாடல் திறன்கள்

III. அபிவிருத்தி ரீதியான மாற்றங்களை மேற்கொள்வதில் உள்ள ஆர்வம்

**.3.0பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கான முறைமை**

பதவிகளுக்கு தெரிவு செய்யும் போது புள்ளி வழங்கும் நடவடிக்கை 02 கட்டங்களின் கீழ் இடம்பெறும்.

**I ஆம் கட்டம் -** சுயவிபரக் கோவையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகைமைகளை கருத்திற் கொள்ளல் மற்றும் புள்ளி வழங்கல்

நேர்முகப் பரீட்சை சபையினால் விண்ணப்பதாரிகளால் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், பின்வரும் பகுதிகளைக் கவனத்திற் கொண்டு, புள்ளிகள் வழங்குதல்.

I. சேவை மூப்புநிலை

II. குறித்த தொழிற்துறை அனுபவம்

III. தொழிற் தகைமைகள்

**II ஆம் கட்டம் -** நேர்முகப் பரீட்சையின் மூலம் புள்ளி வழங்கல்

நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும், நேர்முகப் பரீட்சையின் போது கீழ்வரும் முக்கிய தலைப்பின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

IV. உத்தியோகத்தரின் ஆற்றல்கள்

V. உத்தியோகத்தரின் நடத்தைத் திறன்

விண்ணப்பங்கள் கோரும் முறைக்கு ஏற்ப சேவை மூப்புநிலை மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களின் புள்ளி வழங்கும் நடைமுறைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட்டு வகுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**புள்ளி வழங்கும் முறை .3.1**

| தொடரிலக்கம் | புள்ளி வழங்கும் போது கவனத்திற் கொள்ளப்படும் தேர்வளவுகள் | அதிகபட்ச புள்ளிகள் | மொத்தப் புள்ளிகள் | மதிப்பீட்டுக்கு அடிப்படையாகும் முறைகள் |
|---|---|---|---|---|
| .I | **சேவை மூப்பு நிலை**<br>சேவை மூப்புநிலையில் கூடிய விண்ணப்பதாரிக்கு அதிகபட்ச புள்ளிகள் வழங்கப்பட்டு, பிற விண்ணப்பதாரிகளின் சேவை மூப்பிற்கு விகிதாசார அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். இதன் போது ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் "திருப்திகரமான சேவைக் காலம்" மாத்திரம் கருத்திற் கொள்ளப்படும் | 50 | 50 | விண்ணப்பப்படிவம் |
| .II | **சேவை அனுபவம்**<br>உள்நாட்டலுவல்கள் விடயப் பொறுப்பு அமைச்சின் பதவியொன்றில் சேவையாற்றியிருத்தல்<br>- பிரதேச நிர்வாகத்தில் சேவையாற்றியிருத்தல் அல்லது கிராமிய அபிவிருத்தி, சிறு கைத்தொழில் அபிவிருத்தி, சமூக சேவைப் பணிகள் போன்ற துறைகளில் ஒரு உத்தியோகத்தர் பெற்றுள்ள அனுபவம் பிரதேச நிர்வாகத்திற்கு ஏற்புடையதாக்கிக் கொள்ள முடியும். | 20 | 20 | விண்ணப்பப்படிவம் |

| | | | | |
|---|---|---|---|---|
| .III | **தொழிற் தகைமைகள்**<br><br>*கல்வித் தகைமைகள்*<br><br>*சேவைப் பிரமாணத்தின் படி குறித்த துறையில் பட்டப்பின் பட்ட தகைமைகள்*<br>- ஆராய்ச்சி அடிப்படையிலான பட்டப் பின் பட்டத்திற்கு - 07 புள்ளிகள்<br>- பாடநெறி அடிப்படையிலான பட்டப் பின் பட்டத்திற்கு - 06 புள்ளிகள்<br>- பட்டப் பின் பட்ட டிப்ளோமா - 04 புள்ளிகள்<br>- பட்டப் பின் பட்ட சான்றிதழ் பத்திரம் - 02 புள்ளிகள்<br><br>*பிரதேச நிர்வாகத்துடன் தொடர்புடைய / ஏற்புடைய பயிற்சி பாடநெறிகள்*<br>- *03 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு - 01 புள்ளி*<br>- *10 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு - 0.5 புள்ளி*<br>- *03 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு - 0.2 புள்ளி*<br><br>*மொழித் தேர்ச்சி*<br><br>- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / அரசாங்க பயிற்சி நிறுவனமொன்றில் இருந்து பெறப்பட்ட டிப்ளோமா/ IELTS (Academic) மொத்த புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு மேற்பட்ட, TOEFL-IBT 79 அல்லது அதற்கு மேற்பட்ட, TOEFL-CBT 213 அல்லது அதற்கு மேற்பட்ட, அல்லது TOEFL- PBT 310 அல்லது அதற்கு மேற்பட்ட - 02 புள்ளிகள்<br><br>- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசாங்க பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து பெற்ற ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் - 01 புள்ளி<br><br>அடையாளம் இடப்பட்டுள்ள தலைப்புக்களின் கீழுள்ள அதிகபட்ச ஒரு தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | 07<br><br>01<br><br>02 | 10 | விண்ணப் பப்படிவம் |
| .IV | **ஆற்றல்கள்**<br>- பகுப்பாய்வுத் திறன்<br>- சவால்களை எதிர்கொள்வதற்கான ஆர்வம்<br>- பிரதேச நிர்வாகம் மற்றும் அதனுடன் தொடர்பான அறிவு | 10 | 10 | நேர்முகப் பரீட்சை |
| .V | **நடத்தைத் திறன்**<br>- தலைமைத்துவப் பண்புகள்<br>- தொடர்பாடல் திறன்கள்<br>- அபிவிருத்தி ரீதியான மாற்றங்களைச் செய்தல் | 10 | 10 | நேர்முகப் பரீட்சை |
| .VI | **ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பில் புள்ளிகள் குறைக்கப்படும்.** | -25 | -25 | |
| | **மொத்தப் புள்ளிகள்** | | **100** | |

மேற் கூறப்பட்டவாறு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டள்ள தகைமைகள் மற்றும் நேர்முகப் பரீட்சையின் தகைமைகளுக்கு ஏற்ப அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் குறித்த பதவிகளில் நியமிக்கப்படுவார்கள்.

வெற்றிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர்கள் சமனான புள்ளிகளைப் பெறும் சந்தர்ப்பங்களில் அவ்வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் செயலொழுங்கு விதிக் கோவையின் 80 ஆம் பிரிவின் படி பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

இது குறித்த மேலதிக தகவல்களைப் பெறத் தேவைப்படின், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின், உள்நாட்டலுவல்கள் பிரிவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ( பிரதேச நிர்வாகம்) திரு. டப்ளியூ. பி.சி.ஏ. வீரசூரிய அவர்களை (தொலைபேசி இலக்கம் - அலுவலகம் -011 2050360, (4491764 -071 என்ற இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

**நீல் பண்டார ஹபுகின்ன**

செயலாளர்,

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

திகதி: 2023 மே மாதம் 03ஆம் திகதி